# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1878/12 - 2014 සැප්තැම්බර් මස 01 වැනි සඳුදා - 2014.09.01

*1878/12 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 1/2012*

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14அ, 14ஆ, 14இ, 14ஈ, 14உ, 14ஊ, 14எ, 14ஏ, 14ஐ, 14ஒ, 14ஓ, 14ஔ, 14க மற்றும் 14ங, என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 61 (1) (ந) என்னும் பிரிவின் கீழ் கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

டாக்டர் ராஜித சேனாரத்ன,
கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின
வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
*2014, ஓகத்து 27.*

ஒழுங்குவிதிகள்

*1.* இவ்வொழுங்குவிதிகள் *2014* ஆம் ஆண்டின் *1* ஆம் இலக்க, ஆழ்கடல் மீன்பிடித் தொழிற்பாட்டு ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* ஆளெவரும், பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி, ஆழ்கடலில் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் மீன்பிடித் தொழிற்பாட்டில் ஈடுபடுதலாகாது.

*3. (1)* ஒழுங்குவிதி 2 இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆழ்கடலில் மீன்பிடித் தொழிற்பாட்டு உரிமத்துக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பொருளளவில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட இயைபான உரிமக்கட்டணத்துடன் சேர்த்து பணிப்பாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

*(2)* ஒழுங்குவிதி 2 இன்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வோர் உரிமமும் இதற்கான அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், முன்னர் இடைநிறுத்தப்பட்டாலன்றி அல்லது இல்லாதாக்கப்பட்டாலன்றி, அத்தகைய உரிமம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு பஞ்சாங்க ஆண்டுக் காலப்பகுதிக்குச் செல்லுபடியுடையதாதலும் வேண்டும்.

(3) ஒழுங்குவிதி 2 இன் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை வைத்திருப்பவர், இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட இயைபான உரிமக் கட்டணத்துடன் சேர்த்து உரிமம் முடிவுறுவதற்கு முன்னர் முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் அத்தகைய உரிமத்தைப் புதுப்பிப்பதற்காகப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பிக்கலாம்.

4. ஆழ்கடலில் மீன்பிடித் தொழிற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட உரிமமொன்றை வைத்திருப்பவர், 1982 ஆம் ஆண்டின் திசெம்பர் 10 ஆந் திகதிய கடல்பற்றிய சட்டத்தின் மீதான ஐக்கிய நாடுகள் சமவாயம், 1995 ஆம் ஆண்டின் இந்து சமுத்திர ரியூனா ஆணைக்குழு மற்றும் மீன் கையிருப்புகள் உடன்படிக்கை மற்றும் 2009 ஆம் ஆண்டின் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தலைத் தடுப்பதற்கும், தடைசெய்வதற்கும், ஒழிப்பதற்கும் ஆன கப்பற்றுறை அரசு வழிமுறைகள் மீதான ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் கமத்தொழில் ஒழுங்கமைப்பு உடன்படிக்கை (எவ்ஏஓ) என்பவற்றுக்கிணங்க ஏற்றுக்கொள்ளப்பட்ட பேணிக்காப்பு மற்றும் முகாமை வழிமுறைகளின் கீழ் ஆழ்கடலில் மீன்பிடித் தொழிற்பாடுகளுக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட பின்வரும் நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் :-

(i) பொறுப்பாளர்/தலைவர், ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கான தொழிற்பாட்டு உரிமத்தையும் படகின் பதிவுச்சான்றிதழையும் பொறுப்பாளர் உரிமத்தையும் அல்லது அதன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றையும் எல்லா நேரங்களிலும் படகில் வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரின் வேண்டுகோளின்பேரில் அத்தகைய உரிமத்தையும் படகின் பதிவுச் சான்றிதழையும் பொறுப்பாளர் உரிமத்தையும் காண்பித்தலும் வேண்டும் ;

(ii) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி, ஆழ்கடலின் எப்பாகத்திலும் மின்பிடித்தல் அனுமதிக்கப்படுதலாகாது ;

(iii) படகானது இலங்கைக் கொடியைக் பறக்கவிடுதல் வேண்டுமென்பதுடன், மேற்றளத்தின் இருபக்கங்களிலும் நாட்டின் பெயரையும் (கொடி அரசு) படகின் பதிவிலக்கத்தையும் தெளிவாக வெளிக்காட்டி வைத்தலும் வேண்டும். 1980 ஆம் ஆண்டின் மீன்பிடிப்படகுப் பதிவு செய்தல் ஒழுங்குவிதிகளுக்கிணங்கவும் ஏதேனும் மீன்பிடிப் படகைக் குறியிடுதல் மற்றும் இனங்காணுதலுக்கான உணவு மற்றும் கமத்தொழில் ஒழுங்கமைப்பு நியம அளவுக்குறிப்பீடுகளின் நியதிகளின்படியும் குறியீடுகள் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்.

(iv) மீன்பிடிக் கப்பற்றுறையிலிருந்து புறப்படுவதற்கு நேர்முன்னரும் அத்தகைய கப்பற்றுரையினுட் பிரவேசித்தவுடனும் பொறுப்பானர்/தலைவர் துறைமுக முகாமையாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(v) ஒரு படகின் பொறுப்பாளர்/தலைவர், வேறொரு கரையோர அரசின் ஆள்புல நிர்ப்பரப்புகளில் மீன்பிடித் தொழிற்பாடுகளுக்காக இவ்வொழுங்குவிதிகளின் கீழ் எந்த மீன்பிடிப்படகு தொடர்பில் உரிமமளிக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் மீன்பிடிப்படகை, அந்நாட்டின் சட்டங்களுக்கிணங்க அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டலொழிய, பயன்படுத்துதலோ அல்லது பயன்படுவதனைச் செய்வித்தலோ ஆகாது ;

(vi) கடல்சார் பாலூட்டிகள், கடலாமைகள், திறெஷர் சுறா இனங்கள் அல்லது கடற் பறவைகள் போன்ற தடை செய்யப்பட்ட இனங்களையும் மற்றும் பரிசோதனைக்கு விடப்பட்ட இனங்களையும் படகானது பிடித்தலோ, தரையிறக்குதலோ, இடம்பெயர்த்தலோ, கப்பல் மாற்றியேற்றுதலோ, பெற்றுக்கொள்ளுதலோ அல்லது உடைமையில் வைத்திருத்தலோ ஆகாது ;

(vii) பொறுப்பாளர்/தலைவர் எல்லா நேரங்களிலும் நாளாதுவரையாக்கப்பட்ட விபரக் குறிப்பேடொன்றைத் தமதுடைமையில் வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும் ;

(viii) பந்தி (vii) இன் கீழ்ப்பேணப்பட்ட விபரக் குறிப்பேட்டில் அடங்கியுள்ள தகவல்கள் செம்மையானவையும், பூரணமானவையும், சரியானவையும் எனப் பொறுப்பாளர்/தலைவர் சான்றுப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், கடற்றொழில் துறைமுகத்தை வந்தடைவதன் மேல் இயைபான விபரக் குறிப்பேட்டுத்தாளின் மூலப்பிரதியைப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலரொருவரிடம் அல்லது வேறெவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(ix) செவுள் வலைகளைப் பயன்படுத்தி ஆழ்கடலில் மீன்பிடித்தொழிற்பாடுகள் நிறைவேற்றப்படுமிடத்து, அத்தகைய செவுள் வலைகளின் ஆகக்கூடிய நீளம் இரண்டு தசம் ஐந்து கிலோ மீற்றருக்குக் குறைவாகவிருத்தல் வேண்டும்.

(x) பொறுப்பாளர்/தலைவர் எவரும், ஆழ்கடலில் நிறுவப்பட்ட தரவு மிதவைகளிலிருந்து ஒரு கடல் மைல் விட்டத் தூரத்திற்குள் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடுதலாகாதென்பதுடன், அத்தகைய தரவு மிதவைகளைச் சேதப்படுத்துதலுமாகாது ;

(xi) பொறுப்பாளர்/தலைவர் எவரும், இந்து சமுத்திரத்தில் அட்ச ரேகை வடக்கே $0^0$ - $10^0$, கிழக்கே $0^0$ - $40^0$ - $60^0$ ஆல் வரையறுக்கப்பட்ட இடப்பரப்பில் மற்றும் வேறெவையேனும் பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகளில் பெப்புருவரி மாதத்தின் போது நீள்தூண்டில வலைகளைப் பயன்படுத்தியும் செத்தெம்பர் மாதத்தின் போது சுருக்கு வரைகளைப் பயன்படுத்தியும் மீன்பிடித்தொழிற்பாடுகளில் ஈடுபடுதலாகாது ;

(xii) (அ) சுருக்குவலையொன்றைப் பயன்படுத்துகின்ற எவரேனுமாள், மனித பாவனைக்குத் தகுதியற்ற அத்தகைய மீன் தவிர, கடலில் பிடிக்கப்பட்ட எல்லா பெரிய கண் சூரை, பலயா மற்றும் கிலாவாலை என்பவற்றைப் படகில் வைத்திருப்பதற்கும் தரையிறக்குவதற்கும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும் ;

(ஆ) மீன் அறையில் போதிய இடமில்லையெனப் பொறுப்பாளர்/தலைவர் காணும்போது அவர் பின்வரும் நடபடிகளுள் ஒன்றை எடுத்தல் வேண்டும் :-

(i) சூரையை (பெரிய கண் சூரை, பலயா மற்றும் கிலாவாலை) என்பவற்றை இயன்றளவு விரைவாக உயிருடன் கடலில் விட்டுவிடுவதற்கு அவர் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் ; அத்துடன்

(ii) சூரை (பெரிய கண் சூரை, பலயா மற்றும் கிலாவாலை) அகற்றப்பட்ட பின்னர் படகு கப்பற்றுறையை வந்தடையும்வரை அவர் மீன்பிடித்தலாகாது.

(இ) பொறுப்பாளர்/தலைவர் எவரும், திமிங்கிலங்கள் மற்றும் திமிங்கிலச் சுறாக்களைச் சுற்றி வேண்டுமென்றே சுருக்கு வலைகளை விரித்தலாகாது.

5. ஒழுங்குவிதி 2 இன் கீழ் உரிமமொன்று வழங்கப்பட்ட எவரேனும் ஆள் வேறேதேனும் நாட்டின் ஏதேனும் கப்பற்றுறையில் மீனைத் தரையிறக்குவதற்கு அல்லது கப்பல் மாற்றியேற்றுவதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

6. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, "பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்.

"உரிமமொன்றை வைத்திருப்பவர்" என்பது, படகின் உரிமம் வைத்திருப்பவரின் அல்லது உரிமையாளரின் முகவரொருவரை அல்லது எவரேனும் ஊழியரை உள்ளடக்கும்.

ஒழுங்குவிதி 2

## அட்டவணை I

ஆழ்கடலுக்கான விதித்துரைக்கப்பட்ட மீன்பிடித்தொழிற்பாடுகள்

1. சுருக்கு வலை மீன்பிடித் தொழிற்பாடுகள்
2. நீள்தூண்டில் வலை மீன்பிடித்தொழிற்பாடுகள்
3. செவுள் வலை மற்றும் நீள்தூண்டில் வலை மீன்பிடித் தொழிற்பாடுகள்
4. செவுள் வலை மீன்பிடித்தொழிற்பாடுகள்
5. கம்பம் மற்றும் தூண்டில் வலை மீன்பிடித்தொழிற்பாடுகள்
6. கைத் தூண்டில் வலை மீன்பிடித்தொழிற்பாடுகள்
7. தூண்டிலிடப்பட்டு மீன்பிடித்தல் தொழிற்பாடுகள்.

இலங்கையினால் ஏற்புறுதி செய்யப்பட்ட இணங்கியொழுகப்பட்ட சர்வதேச/பிராந்திய சமவாயம்/தீர்மானம் என்பவற்றுக்கு இணங்குமாறான கடற்றொழின் அபிவிருத்திக்கு அறிமுகப்படுத்தப்படவேண்டிய வேறெவையேனும் மீன்பிடிக் கருவிகள்.

*ஒழுங்குவிதி 3 (1)*

## அட்டவணை II

*கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களம், கொழும்பு 10,*
*இலங்கை, ஆழ்கடலில் மீன்பிடித்தல் உரிமத்துக்கான விண்ணப்பம்*

1. உரிமையாளரின் விவரங்கள் :

(அ) உரிமையாளரின் முழுப்பெயர் :.................... ;
(ஆ) உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் :.................... ;
(இ) உரிமையாளரின் நிரந்தர முகவரி :.................... ;
(ஈ) அஞ்சல் முகவரி :.................... ;
(உ) தொலைபேசி இல:.................... ;
(ஊ) மின்னஞ்சல் :.................... ;

2. பொறுப்பாளரின்/தலைவரின் விபரங்கள்

(அ) பொறுப்பாளரின் தலைவரின் /தலைவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் :.................... ;

(ஆ) பொறுப்பாளரின் உரிமத்தின் இலக்கம் மற்றும் திகதி :.................... ;

3. படகின் விவரங்கள் :

(அ) படகின் பதிவிலக்கம் :.................... ; புதுப்பித்தல் திகதி :.................... ;
முதலாவது படகின் பதிவுத் திகதி :.................... ;

(ஆ) படகின் பெயர் (ஏதேனுமிருப்பின்) :.................... ;

(இ) சர்வதேச வானொலித் தொடர்பு சமிக்ஞை :.................... ;

(ஈ) பதிவகக் கப்பற்றுறை :.................... ;

(உ) படகின் முன்னைய கொடிகள் (எவையேனும் இருப்பின்) :.................... ;

(ஊ) மூல நாடு, கட்டப்பட்ட ஆண்டு :.................... ;

(எ) படகின் வகை :.................... ;

(ஏ) உடற்பகுதிப் பொருள் :.................... ;

(ஐ) நிகர நிறை :.................... ;

(ஒ) ஒட்டு மொத்த நீளம் :.................... ;

(ஓ) இயந்திரத்தின் வகை :.................... ;

(ஔ) இயந்திரத்தின் இலக்கம் :.................... ;

(க) படகின் இயந்திரத்தின்/இயந்திரங்களின் சக்தி :.................... ;

4. மீன்பிடிக் கருவிகளின்/முறைகளின் விபரங்கள் :

(அ) செவுள் வலைகள் (நீளத்தில் 2. 5. கி. மீற்றருக்குக் குறைவாகவிருத்தல் வேண்டும்).

| மொத்த நீளம் | ஆழம் | வலைக் கண் அளவு/ இழை | இலக்குவைத்துள்ள இனங்கள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

(ஆ) நீள்தூண்டில் வலை:

| கொழுக்கிகளின் எண்ணிக்கை | அலகுகளின் எண்ணிக்கை | இலக்கு வைத்துள்ள இனங்கள் |
|---|---|---|
| | | |

(இ) சுருக்கு வலை :

| வலையின் நீளம் | வலையின் ஆழம் | சுதந்திரமாக நீந்துதல் /EAD (நங்கூரமிடப்பட்டது/மிதக்கின்றது) |
|---|---|---|

(ஈ) பயன்படுத்தப்பட்ட வேறு வகையினவான கருவிகள் :

எனது அறிவுக்கு எட்டியவரையில் மேலேயுள்ள வெளிப்படுத்துகையில் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கு எனக்கு உரிமம் வழங்கும் பட்சத்தில், நான், 2013 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழான 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஆழ்கடல் மீன்பிடித் தொழிற்பாடுகள் ஒழுங்குவிதிகளுக்கிணங்க அதன்கண் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதற்கும் 1982 ஆம் ஆண்டின் கடல்பற்றிய சட்டத்தின் மீதான ஐக்கிய நாடுகள் சமவாயம், 1995 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் மீன் கையிருப்பு உடன்படிக்கை, மற்றும் இந்த சமுத்திர ரியூனா ஆணைக்குழு, 2009 ஆம் ஆண்டின் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மீன்பிடித்தலைத் தடுப்பதற்கும், தடைசெய்தற்கும், ஒழிப்பதற்கும் ஆன கப்பற்றுறை அரசு வழிமுறைகள் மீதான ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் கமத்தொழில் ஒழுங்கமைப்பு உடன்படிக்கை (எவ்ஏஓ) என்பவற்றுக்கிணங்க ஏற்றுக்கொள்ளப்பட்ட பேணிக்காப்பு மற்றும் முகாமை வழிமுறைகளுக்கு இணங்கியொழுவதற்கும் பொறுப்பேற்கின்றேன்.

..................................................... ..............................................................

விண்ணப்பகாரரின் கையொப்பம் திகதி

அலுவலகப் பாவனைக்கு மட்டும்

(அ) கடற்றொழில் பரிசோதகரின் அவதானிப்புகள்/விதப்புரைகள் (கப)

செலுத்தப்பட்ட தொகை ரூபா செலுத்திய திகதி :........................................
பற்றுச்சீட்டு இல :........................................

ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கு உரிமம் வழங்குவதற்கு விதந்துரைக்கப்படுகிறது/
விதந்துரைக்கப்படவில்லை.

....................................................................................................................................................................................................

| ........................................ | ........................................ | ................................................ | ........................................ |
|---|---|---|---|
| கையொப்பம் | கடற்றொழில் பரிசோதகரின் பெயர் | கடற்றொழில் பரிசோதகரின் பிரிவு | திகதி |

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதியின்/உதவிப் பணிப்பாளரின்/உரிமமளிக்கும் அலுவலரின் கட்டளை.
ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கு உரிமம் ஒன்றை வழங்குவதனை நான் அங்கீகரிக்கின்றேன்/அங்கீகரிக்கவில்லை.

1. படகைப் பயன்படுத்தி ஆழ்கடலில் மீன்பிடித்தல் நடத்தப்பட வேண்டும்.
பெயர் :.................... ;
பதிவு இலக்கம் :.................... ;

2. அங்கீகரிக்கப்பட்ட உரிம மீன்பிடிக் கருவிகள் :

| கருவிகளின் வகை | வலைகளின் நீளமும்/ஆழமும்/ வலைக்கண்ணின் அளவுகளும் | கொழுக்கிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

3. இலக்கு வைக்கப்பட்டுள்ள இனங்கள் :.................... ;
4. மீன்பிடித் தொழிற்பாடுகளுக்கான நிபந்தனைகள் :.................... ;
5. உரிமத்திற்கான விண்ணப்பம் அங்கீகரிக்கப்படவில்லையாயின், அதற்கான காரணங்கள் :
..........................................................................................................................................
..........................................................................................................................................

.........................................
பணிப்பாளர் தலைமையதிபதியின்/உதவிப் பணிப்பாளரின் கையொபம்.

பெயர் :........................................................................................ திகதி :...............................................................
பதவிப் பெயர் :..............................................................................
மாவட்டம் :....................................................................................

ஒழுங்குவிதி 3 (1), (3)

### அட்டவணை III

ஆழ்கடலில் மீன்பிடித்தல் தொழிற்பாட்டு உரிமத்துக்கான கட்டணம்

| | | | |
|---|---|---|---|
| 1. | நீளத்தில் இருபத்திநான்கு மீற்றருக்கு மேற்பட்ட படகுகள் | - | ஐந்து இலட்சம் ரூபா (ரூ. 500,000) |
| 2. | நீளத்தில் பதினைந்து முதல் இருபத்திநான்கு மீற்றருக்கு | - | ஐம்பதாயிரம் ரூபா (ரூ. 50,000) |
| 3. | நீளத்தில் பத்துத் தசம் மூன்று முதல் பதினைந்து மீற்றருக்கு இடைப்பட்ட படகுகள் | - | பதினையாயிரம் ரூபா (ரூ. 15,000) |

ஒழுங்குவிதி 3 (2)

### அட்டவணை IV

கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களம்
கொழும்பு, இலங்கை.
தொ. பே./தொ. ந. இல. + 94 112449170
மின்னஞ்சல் :depfish@fisheries.gov.lk

ஆழ்கடலில் மீன்பிடித்தலுக்காக மீன்பிடித் தொழிற்பாட்டு உரிமம்

2013 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழான 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஆழ்கடல் மீன்பிடித்தொழிற்பாடுகள் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் நியதிகளின்படியும் 1982 ஆம் ஆண்டின் கடல்பற்றிய சட்டத்தின் மீதான சமவாயம், 1995 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் மீன் கையிருப்பு உடன்படிக்கை, மற்றும் இந்து சமுத்திர ரியூனா ஆணைக்குழு, 2009 ஆம் ஆண்டின் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மீன்பிடித்தலைத் தடுப்பதற்கும், தடைசெய்வதற்கும், ஒழிப்பதற்கும் கப்பற்றுறை அரசு வழிமுறைகள் மீதான ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் கமத்தொழில் ஒழுங்கமைப்பு உடன்படிக்கை (எவ்.ஏ. ஓ) என்பவற்றின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பேணிக்காப்பு மற்றும் முகாமை வழிமுறைகளுக்கு இணங்கியொழுகுவதற்கிணங்கவும் (உரிமத்தின் நிபந்தனைகளுக்காக மறுபக்கம் பார்க்க).............. ஆந் திகதியிலிருந்து.......................... ஆந் திகதிவரை ................................ என்னுமிடத்தைச் சேர்ந்த திரு./ திருவாட்டி......................... என்பவருக்கு ஆழ்கடலில் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடுவதற்கான உரிமம் இத்தால் வழங்கப்படுகின்றது.

1. உரிமம் வழங்கப்பட்ட படகின் பதிவு இலக்கம் :..........................................................................................
2. மீன்பிடிப் படகின் நீளம் :......................................................................
3. உரிமத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட மீன்பிடித் தொழிற்பாடுகள் .

| அதிகாரமளிக்கப் பட்ட மீன்பிடிக் கருவிகள் | மீன்பிடி வலைகளின் நீளம் மற்றும் வலைக் கண்ணின் அளவு (ஆகக்கூடிய நீளம் 2.5 கி. மீற்றராக இருத்தல் வேண்டும்) | கொழுக்கிகளின் எண்ணிக்கை, மிதக்கும் தூண்டில் நீளம் மற்றும் கிளைத் தூண்டில் வலைகளின் நீளம் | அதிகாரமளிக்கப் பட்ட மீன் இனங்கள் | ஆழ்கடலில் மீன்பிடிக்கும் இடப்பரப்பு |
|---|---|---|---|---|

வேறொரு கரையோர அரசின் புறநீங்கலான பொருளாதார வலயத் திற்கு வெளியே இந்து சமுத்திர ஆழ்கடலில்

4. உள்நாட்டு கப்பற் துறைத் தரையிறக்கம் :.....................................................
5. மீன்பிடிக்கும் காலப்பகுதி :..........................................................................

கடற்பாலூட்டிகள், கடலாமைகள், திறெஷர் சுறாக்கள், கடற்பறவைகளின் இனங்கள் என்பவற்றைப் பிடித்தல், உடைமையில் வைத்திருத்தல், இடம்பெயர்த்தல் மற்றும் கப்பல் மாற்றியேற்றுதல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. ஆழ்கடலில் நிறுவப்பட்டுள்ள தரவு மிதவைகளிலிருந்து ஒரு கிலோ மீற்றர் விட்டத்தினுள் மீன்பிடித் தொழிற்பாடெதுவும் நடாத்தப்படுதலாகாது.

.................................................................................  ........................................
திகதி  பணிப்பாளர் தலைமையதிபதி/உரிமமளிக்கும் அலுவலர்.

9- 533

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.